# விடிவு

இரண்டாம் ஆண்டு மலர்

இதழ் - 9 1990 அன்பளிப்பு ரூபா 6.00



ஒரு 'மக்கள் கலை இலக்கியப் பேரவை' வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AUM

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# MANTEX TRADERS

*Importers, Exporters. Wholesalers, Retailers of Textiles & Garments*

46/8, THIRD CROSS STREET,
COLOMBO - 11, SRI LANKA.

Phone : 548742 Grams : "OMNAMMO"

Estd : 1967

---

*Best Wishes from*

## Manoj Enterprises

Wholesale & Retail Dealers in Electronic, Fancy Goods. Electrical & Readymade Garments Etc.

**Favourite Shopping Centre,**
128 1/1, 16 Q Keyzer Street,
Colombo 11.

---

*With Best Compliments*

*from*

## EFFAAR

Dealers in Electrial Goods and T.V. & Radio, Electronics Spare Parts Etc.,

**M. G. FAZUL RAHUMAN**
(Proprietor)

No. 118/A, First Cross Street,
Colombo 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பீடம்

## மரணம் மலிந்த மண்ணில் மானுட விடிவுக்காக . . .

மக்கள் கலை, இலக்கியப் பேரவையின் வெளியீடான விடிவு சஞ்சிகையின் இரண்டாம் ஆண்டு மலர் விரிக்கப்பட்டிருப்பதில் நிறைவான ஆனந்தம் அடைகின்றோம்.

மரணம் மலிந்து, மனுக்குல நீதிகள் யாவும் எழுத்துக்குள்ளேயே அடக்கப்பட்டு முழுத் தீவுமே முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்த கடந்த ஆண்டில் நாம நமது முயற்சிகளை, தொழிற்பாடுகளை பின்னடையாது மானுட விடிவிற்காக வெற்றிகரமாகியதை நமது முடிவுகள் உங்களுக்கெல்லாம் உணர்த்திக்கொள்ளும்.

மிக முக்கியமாக-
எமது வெளியீட்டு முயற்சிகளில்-
புதிய உறுப்பினர்களைத் திரட்டியதில்-
புதிய கிளைகளை ஸ்தாபித்ததில்-
சமூகவியல் கருத்தரங்கு, கவியரங்குகளை நடாத்தியதில்-
போலி இலக்கியவாதிகளை அம்பலப்படுத்தியதில்

நாம் எதிர்நோக்கிய தெளிவான வெற்றிகள் எமக்கு சுகமானவையாகவும், தைரியப்படுத்துவதாகவும் அமைந்தது குறிப்பிடத் தக்கதே! நமது இந்த வெற்றிகளின் பின்னால் எமது பேரவை உறுப்பினர்களின் ஐக்கியமான செயற்பாடுகளும், கொள்கைச் சிதம் கலந்த உறுதியான போராட்டமும் வாசகர்களின், அபிமானிகளின் வெறித்தனமான ஆதரவும் அடங்கியுள்ளதை அறிவிப்பதில் முன்நிற்கிறோம்.

ஒரு பரந்துபட்ட மகத்தான மானுட விடியலுக்கான எம் பணிகள் குறுகிய எல்லைகளைக் கடந்து சர்வதேச வீதிகளில் இணைக்கப்பட்டவையே. இந்த இனிய எல்லைகளை நாம் அடைவதில் இருக்கும் தடைகள், எதிர்ப்புக்கள், காட்டிக் கொடுப்புக்கள் யாவும் எம்மை எம் பணியில் பலமடையச் செய்ய உதவுமேயன்றி அது பலவீனத்தோடு இணைக்கப்பட்டு மக்களில் இருந்து எம்மை அந்நியமாக்க உதவாது என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு வருடகால எம் வரலாற்றுப் பயணத்திற்கு உதவியவர்களை இப்பகுதி மூலம் நினைத்துப்பார்ப்பது நன்றிக்குரிய தாகும்.

எதிரிகளின் கடிதம் மற்றும் நேரடியான எச்சரிக்கைகளைக் கடந்து எம் வெளியீட்டு முயற்சிகளுக்கு அன்பளிப்பு, மற்றும் ஆக்கங்கள் அனுப்பி உதவிய வாசகர்களுக்கு, எழுத்தாளர்களுக்கு —

எமது பேரவையின் கிளைக் கவியரங்குகளில், கருத்தரங்குகளில், வெளியீட்டு விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்த கவிஞர்களுக்கு சிறப்புரையாளர்களுக்கு, பார்வையாளர்களுக்கு—

எமது வெளியீட்டு முயற்சிகளுக்கு விளம்பரம் மூலம் ஒத்துழைப்பு தந்த வியாபார ஸ்தாபனத்தார்களுக்கு —

எமது செயற்பாடுகளின் விபரத்தை பத்திரிகைகளில் பிரசுரித்து உதவிய தினகரன், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, THE ISLAND, SUN ஆகிய பத்திரிகை ஆசிரியர்களுக்கும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஊர்க்கோலம் பகுதித் தயாரிப்பாளர், பொறுப்பாளர்களுக்கும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவு பொறுப்பாளர்களுக்கும் —

கருத்தரங்குகள், கவியரங்குகள் நடாத்துவதற்கு மண்டப உதவிகள் செய்துதந்த க. கலைமகள், கொட். முஸ்லிம் வித்தியாலய நிர்வாகத்துக்கு, விடிவு சஞ்சிகையினை அச்சிட்டுத் தரும் குமரன் உரிமையாளருக்கு, விடிவு சஞ்சிகையினை அழகுற அச்சாக்கும் எம் நேசத்துக்குரிய குமரன் ஊழியர்களுக்கு —

எம் பேரவையின் வளர்ச்சியில் அச்சம் கொண்டு எமக்கு எதிராக செயற்படுவோர்களுக்கு, எம்மை அதிருப்தி அடையச் செய்ய முயலும் அனுதாபத்துக்குரிய விமர்சகர்களுக்கு, எம்மை சுய விமர்சனத்துக்கு உட்படுத்தும் நேச விமர்சகர்களுக்கு இதயபூர்வமான இனிய நன்றிகளை நவில்வதில் கடமைப்படுகின்றோம்.

தேச விமோசனத்துக்கான பணியில் ஈடுபடும் மக்கள் கலை, இலக்கியப் பேரவை ஒரு சிறு குழுவின் இயக்கமல்ல. அது கஷ்டப்படும் ஏழை மக்களின் எழுச்சிக்கான இருப்பிடம். அதன் வெற்றியில் பங்கு கொள்வது சமூகப் பொறுப்பு வாய்ந்த மனிதர்களின் கடமையென்பதை ஆணித்தரமாக அறிவித்து விடைபெறுகின்றோம்.

---

**எங்கள் எழுதுகோல்கள் ஏழைகளின் எழுச்சிகளை ஏந்திவரட்டும்!**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிலைவாதம், பெண் விடுதலை

## ஒரு நோக்கு

பெண்ணிலைவாதம், பெண் விடுதலை தொடர்பான ஆரோக்கியமான கருத்துக்கள் இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எமது நாட்டில்கூட பெண் விடுதலைபற்றிய சிந்தனைகள் இளைய தலைமுறையினர் மத்தியிலே வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆனால் பெண்ணிலைவாதம், பெண் விடுதலை குறித்த சரியான விளக்கமோ, அறிவோ எம்மத்தியில் காணப்படும் பெண்கள் அமைப்புக்களிடம் இல்லை.

குறிப்பாக பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகள் ஆண்களிடையே எரிச்சலூட்டுவதாகவே உள்ளது. இவ்வமைப்புக்கள் தமது பெண்கள் சார்பான பிரசாரத்தை ஆண்கள் எதிர்ப்புவாதமாக்க முயல்கின்றன. பெண் விடுதலை என்பது பெண்களுடன்மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இது ஓர் சமுதாயப் பிரச்சினை.



பெண் ஒரு மனித ஜீவி. ஆணுக்குள்ள சகல உரிமைகளும் அவளுக்குமுண்டு. [எந்தவகையிலும் அவள் ஆணைக் காட்டிலும் தாழ்ந்தவளல்ல, அதேபோல் தெய்வீகத்தன்மை பொருந்திய கற்பனைவாதப் பொருளுமல்ல. கீழைத்தேய நாடுகளிலேயே பெண்ணடிமைத்தனம் கூடுதலாகவுள்ளது. இங்கேயே பெண்களைத் தெய்வமாக உருவகப்படுத்தி வழிபடும் முறையும் நிலவுகிறது.

புராண நாயகிகளான கண்ணகி, சீதை, சாவித்திரி எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவர்களில் யார் கற்பில் சிறந்தவள் என அலசி ஆராய்வதிலேயே இன்னும் நேரத்தை செலவிட்டுக்கொண்டிருக்கிறோம். தற்காலத்திற்குரிய முறையில் யதார்த்தபூர்வமான சிந்தனைகள் எம்மிடையே தோன்றுதல்வேண்டும். பெண்ணினவாதம் தொடர்பான புதிய சிந்தனைகள் இளைய தலைமுறையினரிடையே ஓரளவு விரவியுள்ளதென்பதனை முற்றாக நிராகரித்துவிடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவிடயத்தில் பெண்கள் அமைப்புக்கள் சரியானமுறையில் நடந்துகொள்ளவில்லை என்பது வெள்ளிடைமலை.

பெண்கள் அமைப்புக்களில் பதவிகள்வகிக்கும் பல சகோதரிகள் இன்று எமது பிரதேசத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெளிவில்லாதவர்களாகவுள்ளனர். நீண்டகாலமாகவே ஆண்கள் சீதனம் என்ற பெயரில் பெருந்தொகையினை திருமணத்தின்போது பெண்ணின் பெற்றோரிடம் வாங்கும்முறை நிலவுகிறது. இது நீக்கப் படவேண்டியது. யாரும் இம்முறையை நியாயப்படுத்தமுடியாது.

எமது சமுதாயத்தில் சீதனப் பிரச்சினை மிக ஆழமாக வேர்விட்டுள்ளது. பெண்கள் அமைப்புக்கள் பல இதுகுறித்து குரல் கொடுக்கின்றன. குரல் கொடுப்பதோடு சரியாகிவிடுமா? ஆண்கள் சீதனம் வாங்கக் கூடாதெனக் கூச்சல்போட்ட இவர்களே பின்னர் தங்கள் அந்தஸ்துக்கும்மேலாக சீதனம் கொடுத்து டாக்டரையோ என்ஜினியரையோ வாங்கிக்கொள்கிறார்கள். இவர்களெல்லாம் எதற்காகத் தம்மைச் சீர்திருத்தவாதிகளாகக் காட்டிக்கொள்கிறார்கள்? சமூகத்தில் பேரும் புகழும் எடுக்கவேண்டுமென்ற ஆசைதான். வேறொன்றுமில்லை.

உலக அரங்கில்

உலகில் இன்று வளர்ச்சியடைந்த நாடுகளைக் காட்டிலும் வளர்முக நாடுகலிலேயே பெண்ணடிமைத்தனம் கூடுதலாகவுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சோஷலிஸ அமைப்புடையவைகளில் பெண்ணடிமைத்தனம் விரவியதாக இல்லை.

பெண்களின் கல்வி நிலை எங்கெல்லாம் உயர்வாகவுள்ளதோ அங்கெல்லாம் சமுதாயத்தில் அவர்களது நிலையும் உயர்வாகவே உள்ளது.

எமது நாட்டிலும் வடபகுதியில் இன்று இதனை அவதானிக்க முடிகிறது. போராட்டங்கள் காரணமாக இறந்தவர்கள், சொந்த நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளால் வாழவழியின்றி வெளிநாடு செல்வதால் இளைஞர்களின் எண்ணிக்கை குறைவடைந்த நிலையில் பெண்களே ஆண்கள் புரியும் பணிகளையும் நிறைவேற்றவேண்டியவர்களாகவுள்ளனர். யாழ், பல்கலைக்கழகத்தில் அரைவாசிக்கும் கூடுதலாக பெண்களே கல்வி பயில்கின்றனர்.

பெண்கள் அறிவுமேம்பட்டுள்ள நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவே உள்ளது. இதற்குக் காரணம் படித்த பெண்கள் ஒன்றோ இரண்டோ பிள்ளைகளுக்குமேல் பெற்றுக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவதில்லை. இதனால் இந்நாடுகளில் சிசு மரண வீதம் குறைவாக வும் ஆயுட்காலம் கூடுதலாகவும் உள்ளது,

## வரலாற்றுப் பின்னணி

சேர். ஹென்றி மெயின் என்ற அறிஞரின் கருத்துப்படி ஆதி காலத்தே உருவான சமுதாய உறுப்பு குடும்பம். இக் குடும்பத்திலே ஆண் தலைமை முக்கியம்பெறுகிறது. ஆண் குடும்பத்துக்கு தலைமை தாங்கினான் என்பதே கருத்தாகும். ஏனைய ஆண், பெண், குழந்தை கள் ஆணின் தலைமையை ஏற்றனர். குடும்பத் தலைவனான ஆணின் ஆதிக்கம் குடும்பம் முழுவதும் பரவிக் காணப்பட்டது. நாளடைவில் இக் குடும்பம் பல குடும்பங்களாகின்றது.

அப்பிரிந்த குடும்பங்களிலும் ஆணே தலைமைதாங்குகிறான். இவ்வாறு ஒரு குடும்பத்தில் பல குடும்பங்கள் தோன்றின. ஒரு குடும்பத் திலிருந்து பல தோன்றியதால் உறவில் ஒன்றுபடுகின்றன. உறவுகள் சேர்ந்து இனமாக பரிமாணம் அடைகின்றன. குடும்பங்களில் வயது முதிர்ந்தவன் தலைவனாக மதிக்கப்படுகிறான். இந்த ஆண் தலைமை தாங்கிய குடும்பங்களில் பெண்ணுக்கு உரிமை கிடையாது. அவள் அதி காரம் அற்றவளாகின்றாள் அடிமை நிலையில் இருத்துள்ளாள். எந்த நிலைமையிலும் பெண் முக்கியத்துவம் பெறாமைவால் ஆண் தலைமை மேலோங்குகிறது. குடும்பத்தில் மூத்த ஆணுக்கு எல்லோரும் கட்டுப் படுவதால் அவரை அடிப்படையாகக்கொண்டு அரசியல் வாழ்வு உரு வாகிறது.

ஆதிகாலம் தொட்டு மனித இனத்தில் ஆண் மேலாதிக்கமே நிலவுகிறதென சேர். ஹென்றி மெயின் கூறியபோது, இதற்குமாறாக பண்டைக்காலம் பெண் மேலாதிக்கம்தான் நிலவியதென்ற கருத்தை அறிஞர் மக்லன் முன்வைக்கிறார்.

மனித இனம் தோன்றிய காலத்தே குடும்பங்களுக்கு ஆண் தலைமை கிடையாது. அக் குடும்பம் முழுவதையும் இணைத்தவள், ஆதிக்கம் செலுத்தியவள் பெண்ணென்பது இவரது கோட்பாடு.

முதலில் விலங்குகள் போன்று வாழ்க்கையை ஆரம்பித்த மனி தன் பாலுணர்வால் பெண்ணை அடையும் நிலை உருவாகியது.

கால ஓட்டத்தில் விலங்குகளாக வாழ்ந்தவன் பின் விலங்குகளை வளர்க்கும் பரிணாம நிலைக்குள்ளாகிறான். இவ்வாழ்க்கைக்கு பெண் உதவி தேவைப்பட்டது. எனவே, அவள் கூடிய முக்கியத்துவத்தினை அக்காலம் பெற்றாள்.

நடைமுறை வரலாற்றில் இது நடைபெற்றதா என்பதில் சந் தேகம் இருப்பினும் சில வரலாற்றுக் காரணங்களால் இதனை முற் றாக நிராகரித்துவிடவும் முடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலை

இன்று ஏனைய தெற்காசிய நாடுகளான இந்தியா, பங்களா தேஷ், பாகிஸ்தான் போன்று இலங்கையில் பெண்ணடிமைத்தனம் இல்லை. அதற்காக முற்றாக நீங்கிவிட்டதென்றும் கூறமுடியாது.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் வரதட்சணைப் பிரச்சினை கள் காரணமாக நாளாந்தம் எவ்வளவோ பெண்கள் இம்சைப்படுத்தப் படுகிறார்கள். ஏன் கொலைக்கும் ஆளாகிறார்கள்.

பங்களாதேஷிலோ பெண்கள் அடிமைகளாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படும் கொடுமை நிலவுகிறது. இதனைத் தடுக்க அந் நாட்டு அரசாலும் முடியவில்லை.

ஒப்பீட்டுரீதியில் இலங்கையில் பெண் அடிமைத்தனம் இந்நாடு களைப் போன்று இல்லை. இதற்குக் காரணம் பெண்கள் கல்வி நிலை யில் மேம்பட்டுள்ளமையே.

வெறும் நாவீச்சுக்களால் மட்டும் பெண் விடுதலை கிடைத்துவிட மாட்டாது. பெண்கள் மத்தியில் ஏற்படும் முற்போக்கான சிந்தனை களின் செயற்பாடுகள்மூலமே பூரண விடுதலையை அடையமுடியும். பெண்களின் விடுதலை பெண்களின் கைகளிலேயே.

— தமிழினி

---

## பிரச்சாரம்

மது அரக்கனையுந்தான்
மலையகத்திலிருந்து
ஒழித்துக்கட்ட
வேண்டுமென்றுமே
பிரச்சாரம் செய்தவர்தான்
''கோ. நடேச ஐய'' ரென்று
கூட்டம் போட்டுச்
சொல்ல வந்தவர்களும்
கள்ளுச் சாராயத்தை
நன்றாகவே
போட்டுக்கொண்டேதான்
வந்திருந்தார்களாமே

— ரூசோ மாத்தளை

## அசந்துப்போனேன்

சிந்தனைத்தேரில்
ஏறி ஒருநாள்
சுவர்க்கம் போனேன்
ஊரில் வாழ்ந்த
உத்தமர் ஒருவரும்
அங்கே காணோம்
ஏனென்று கேட்டேன்
''நரக நெருப்பில்
நலிகிறார்'' என்று
அசரீரி ஒன்று
அறிவிப்புச் செய்ய
அசந்துப் போனேன்

— சாரணாகையூம்-பதுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மலையகப் பிரச்சினைகள் நாளைய மாற்று வழிகள்!

— மலையன்பன், பசறை —

மலையகத் தமிழர்கள் இனம் எமது இலங்கை நாட்டுக்கு கூலித் தொழிலாளர்களாக இறக்குமதி செய்யப்பட்டு இப்போது நூற்றியெழுபது வருடங்களாகின்றது.

நூற்றியெழுபது வருடங்கள் கடந்த பின்பும் இதுவரையும் இந்தச் சமுதாயம் விடிவு பெறவில்லை.

அரசினாலும், தோட்ட நிருவாகத்தினாலும், தொழிற்சங்கங்களினாலும் மலையகத் தொழிலாளர் சமூகம் சுரண்டப்பட்டதே தவிர அது எந்தவித வளர்ச்சியையும் காணவில்லை.

தோட்டப்புற மாணவர்களது கல்வி வருடாவருடம் கீழ்நிலைக்கே இறங்கிக்கொண்டிருக்கின்றது. சர்வகலாசாலை செல்லும் மலையக மாணவர்களது தொகை படிப்படியாகக் குறைந்துகொண்டு செல்கின்றது. ஆனால் தோட்டப்புறக் கல்வி நிதியாக வருடாவருடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. அந்தப் பணத்தை அனுபவிப்பவர் எவரோ?

மத்திய மாகாணம் மலையகத் தமிழர்களின் கோட்டை என்று சொல்லப்படுகின்றது. மலையகத்தின் தனிப்பெருந்தலைவர் இப்பகுதியில் செல்வாக்கு மிக்கவர் என்றும் சொல்லப்படுகின்றது. மத்திய மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஒரு மலையகத்தவர்.

இந்தநிலையில். மத்திய மாகாணத்தின் தலைநகரான கண்டியில் ஒரு தமிழ் மகாவித்தியாலயம் இல்லை. கண்டி கல்வித் திணைக்களத்தில் ஒரு மலையக தமிழ் அதிகாரிகூட இல்லை.

65 சதவீதமான தமிழ் மக்கள் வாழும் நுவரெலியா மாவட்டத்தில் மூழுமையான வசதிகள் கொண்ட தமிழ் கல்லூரி அமைக்கப்படவில்லை. நுவரெலியா கல்வித் திணைக்களத்தில் ஒரு மலையக தமிழ் அதிகாரிகூட நியமிக்கப்படவில்லை.

மாத்தளை மாவட்டத்தின் கதியும் இதேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985, 1986 ஆம் ஆண்டுகளில் பெருந்தோட்ட ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இதில் 25% வீதம்கூட மலையகத்தைச் சார்ந்தோருக்கு நியமனம் இல்லை. மலையகத் தொழிற்சங்கங்கள் மலையகத்தைச் சாராதோருக்கு இந்நியமனங்களை விற்றதாக மாத்திரம் அறியக்கூடியதாக இருந்தது.

மலையகத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வாழும் குடியிருப்புகள் சொந்தமாக்கித் தரப்படும் என்றும் பிரஜாஉரிமை சான்றிதழ் தேவையில்லை என்றும் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும் என்றும், தோட்டப்புற இளைஞருக்கு தொழில் வாய்ப்பு பெற்றுத் தரப்படும் என்றும், தோட்டத்தொழிலாளருக்கு மாதச்சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் தொழிற்சங்கங்கள் தம்பட்டம் அடித்தன.

இதில் எதுவுமே நடக்கவில்லை. குடியிருப்புகள் சொந்தமாக்கப் படவில்லை! பிரஜாவுரிமை சான்றிதழின்றி நாட்டில் எந்தக் காரியமும் செய்யமுடியவில்லை! தோட்டத் தொழிலாளர்களது பொருளாதார வளர்ச்சி நாட்டின் ஏனைய மக்களது பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடும்பொழுது 25% தானும் உயரவில்லை. மலையகத்தில் இருந்து பாஸ்போர்ட் எடுக்க வருபவர்கள் தொழிற்சங்க அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்கவேண்டியுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கதே!

மலையகத் தொழிற்சங்கங்கள் செய்த நல்ல காரியங்கள் என்னவென்றால் தோட்டத் தொழிலாளர்களை கட்சி ரீதியாக, ஜாதி ரீதியாக வேறுபடுத்தி தோட்டங்களில் அமைதியற்ற நிலையை ஏற்படுத்தின.

தமது தொழிற்சங்க செல்வாக்கைப் பயன்படுத்தி தமது உறவினர்களுக்கும், சாதிக்காரர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஜே. பீ. பட்டம் பெற்றுக்கொடுத்தன.

இதன் பிரதிபலிப்பு கடந்த ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் பலமாக ஒலித்தது.

மலையக இளம் தலைமுறையினர் இந்த தொழிற்சங்கவாதிகளின் தில்லுமுல்லுகளைக் கண்டு தற்போது திசைமாறிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் மலையகத் தமிழ் மக்கள் சகல மலையக தேர்தல் வேட்பாளர்களையும் மலையகமெங்கும் ஒதுக்கித்தள்ளிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கைப் பாராளுமன்றத்திலே மலையகப் பாட்டாளி மக்களின் வாக்குப்பலத்தால் தெரிவுசெய்யப்பட்ட எந்தவொரு மலையகப் பிரதிநிதியும் இல்லை.

இது மலையக மக்களின் விழிப்புணர்வைக் காட்டுகின்றது. இனி மேலாவது பாட்டாளி மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் உண்மைச் சேவகர்களை இனங்கண்டு அவரை மக்கள் மன்றத்துக்குப் பிரதிநிதியாக அனுப்ப பாட்டாளி மக்கள் சிந்திக்க வேண்டும்.

மலையகப் பாட்டாளி மக்களின் தலைவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு மலையகப் பாட்டாளிகளைச் சுரண்டும் போலிகள் தமது பிழையுணர்ந்து தம்மை திருத்தி அமைத்துக்கொள்ளவேண்டும்.

இது நடைமுறையாகாவிடின் மலையகத்தில் இளம் தலைமைகளின் போராட்டம் தொடருவதனை தவிர்க்கமுடியாது போகலாம்.

---

# ஈழத்து இலக்கிய விமர்சனத்துறை இன்னுமேன் முடங்கிக்கிடக்கிறது

**சட்டத்தரணி எஸ். முத்துமீரான் LL. B.**
[சட்டமுதுமாணி மாணவர், கொழும்பு வளாகம்]

(கடந்த இதழ் தொடர்ச்சி)

இறுதியாக தமிழ் மொழியையும். அதன் இலக்கண வரம்புகளையும் புரியாத, புரிய முடியாத வாய்ச்ச வாடாங்களும் இலக்கிய விமரிசனம் என்ற நிலையில் தமிழ் சினிமா தொடக்கம் அஞ்சல் அட்டைகள் வரை சகலவற்றையும் அறிமுகப்படுத்தும் பணியாளர்களாக ஆழமும். ஆற்றலுமில்லாது தடுமாறிக்கொண்டிருக்கும் குப்பைகளும் நாங்கள் உண்மையிலேயே விமர்சகர்கள் தானா, நாங்கள் எழுதுவதெல்லாம் இலக்கிய விமர்சனங்கள்தானா என்று தங்கள் கைகளைத் தங்கள் நெஞ்சங்களிலேயே வைத்துக் கேட்டு, காத்திரமான இலக்கிய விமர்சனங்கள் கொண்டு ஒதுங்கிக் கொண்டால் ஈழத்து இலக்கிய விமர்சனத்துறை தன் முடக்கு வாதத்திலிருந்து விடுபட்டு, ஒளிபெற வழி பிறப்பதோடு ஜீவனுள்ள இலக்கியப் படைப்புகளும், வெளிவர வாய்ப்புக்களும் ஏற்படலாம்.

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெயர் சொல்ல வாழ வேண்டும்!

—கலாநெஞ்சன் ஷாஜஹான்—
[கொழும்புப் பல்கலைக்கழகம்]

நேசத்தை நாசமாக்கும் நாசகர்கள்
தேசத்தில் நோய் கண்டு நலியவேண்டும்
மோசத்தை முதல் வைத்து பிழைப்பவர்கள்
மனந் திருந்தி உழைத்துப் பிழைக்க வேண்டும்
வேசத்தை கண்டு அதில் மயங்கு பவர்
வெளிச்சத் தில் வேசத்தை விளங்க வேண்டும்!

-oo-

தாய் நாட்டை வெளியினிலே விற்பவர்கள்
தாய் தந்தை தார மிழந்து நிற்க வேண்டும்
வாய் பேசா (த) ஜீவன்களை வதைப்பவர்கள்
வேதனை மிகு செயலதனை நிறுத்த வேண்டும்
வாய்மை தவறி ஊரை ஏய்க்கும் பித்தர்கள்
பித்தலாட்டம் திட்டொழிந்து நடக்க வேண்டும்!

-oo-

வாழும் நாட்டு பெருமையினை சிதைப்பவர்கள்
வசித்திடவே இடமின்றி அலைய வேண்டும்
பாலும் பழமும் தினமுண்ணும் உள்ளவர்கள்
பசித் திருக்கும் யாசகட்கும் கொடுக்க வேண்டும்
ஏழைகளின் வயிற்றி லடிக்கும் வர்த்தகர்கள்
அளவோடு வருமானம் ஈட்டவேண்டும்:

-oo-

பிறந்த மண்ணை மதியாமல் இருப்பவர்கள்
புசித்திடவே உணவின்றி இறக்க வேண்டும்
இருக்கும் போது ஆதனத்தை சேர்ப்பவர்கள்
இறக்கு முன் புண்ணியத்தை சேர்க்க வேண்டும்
பிறந்து பயனை அடைந்திடவே நினைப்பவர்கள்
போன பின்னும் பெயர் சொல்ல வாழ வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பூமி

கடந்த இதழின் அட்டைக்கவிதை நன்றாக இருந்தது. மலையக மக்களின் அன்றாட பிரச்சினைகளை மற்றோரும் அறியும் வண்ணம் வெளிவரும் இச்சஞ்சிகையும், பேரவையும் போற்றத்தக்கதே. சிறு கதை, அரசியல் கட்டுரை, இலக்கியப்பக்கம், மற்றும் புதிய கவிதைகள், சிறு தகவல்கள் யாவும் படித்து சேகரிக்கப்பட வேண்டியவையே.

அ.கி. சந்திரராஜன்,
திருகோணமலை.

விடிவு இரண்டாம் ஆண்டு மலர் வெளிவரும் தகவலைப்படித்து சந்தோஷப்பட்டவர்களுள் நானும் ஒருவன். உங்களது கஷ்டங்களை நான் நன்கு அறிவேன். உங்களது இந்த முயற்சிகளினால் நமக்குள் உள்ள நயவஞ்சகர்களை அடையாளம் காட்டுகிறீர்கள். ஒரு தரமான முன்னேற்ற சஞ்சிகையொன்றை அதுவும் மலையகத்தில் வெளியிடுவ தன் சிரமம் எல்லோரும் அறிந்ததே. தற்போதைய புத்தக அமைப்பை மாற்றாதீர்கள். உங்கள் பேரவையின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் குறித்துப் பேசப்படும்.

செ. நிகஷன்
வவுனியா

எவருக்கும் தனிப்பட்ட முறையில் சலுகைகள் வழங்காது சம வாய்ப்பை வழங்குங்கள். உங்கள் பயணம் வெற்றி பெறட்டும்.

நிஸ்வா ஏ. சலாம்
தர்கா நகர்

கடந்த இதழின் சிறுகதைகள் நன்றாகவே இருந்தன. சமூக முரண்பாட்டை தேசிய பத்திரிகைகளில் எழுத முடியாது தவிக்கும் எம் போன்றோருக்கும் விடிவு வாய்ப்பைத் தருகிறது.

– என். இராமநாதன் -
(யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
– அட்டன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஐரோப்பாவின் ஸ்டாலினிச வீழ்ச்சியும் சோஷலிச பாதுகாப்பும்

-பேராசிரியர் அலக்சாந்தர் சுப்ரயான்

கிழக்கு ஐரோப்பாவில் சோ ஷ லி ச ம் நிராகரிக்கப்படவில்லை. ஆனால் 'ஸ்டாலின் மாடல்' நிராகரிக்கப்பட்டுள்ளது. கி. ஐ. நாடுக ளில் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் ஆகிய துறைகளில் இது வரை கண்டிராத மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இ ந் நி க ழ் வு ப் போக்குகள் பின்னுக்குத் தள்ளப்பட முடியாதவை.

எல்லா இடங்களிலும் பழைய ஸ்டாலின்-பிரேஷ்னோவ் மாடல் சோஷலிசம் தகர்ந்து வருகிறது. இந்த பழைய மாடல் சோஷலிசம் ஒவ் வொரு நாட்டிலும் ஒவ்வொரு வழியில் வெளியிடப்பட்ட போதிலும் சில அம்சங்கள் இந்த நாடுகள் எல்லாவற்றிலும் பொதுவாக உள்ளன. சில இடங்களில் சில வளர்ச்சிக் கட்டங்களில் இந்த சோஷலிச மாடல் இந்த நாடுகளின் வரலாற்று மரபுகளுடன் முரண்பட்டு நின்றது. இந்த நாடுகள் ஏற்கனவே பூர்ஷ்வா ஜனநாயகத்தில் வளமான அனுபவத் தைக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் தான் கிழக்கு ஐரோப்பாவில் இன்று வரலாற்று யதார்த்தங்களுக்கு ஏ ற் ப புதிய அமைப்பு முறைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

அரசியல் அமைப்பைப் பொறுத்தவரையில் கம்யூனிஸ்ட் கட்சிக ளிடை நெருக்கடிகள் தோன்றியுள்ளன; கடந்த காலத் தவறுகளுக்கு எதிரான மக்களின் கோபாவேஷம் எப்படியிருக்குமென்பதைக் கம்யூ னிஸ்டுகள் இன்று நேரடியாகவே உணர்ந்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி என்பது ஏதோ 50 அல்லது 100 பேர்களை மட்டுமே கொண்ட தல்ல. சோஷலிசக் கொள்கையின் பால் ஈடுபாடு கொண்ட பல்லாயிரக் கணக்கானவர்களை தன்னகத்தே கொண்ட இயக்கமும் அது. ரூமேனி யாவில் முதலில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டதும் பின்பு அந் தத்தடை நீக்கப்பட்டதுமான சம்பவம் இதனைக் காட்டும்.

சோஷலிஸக் கொள்கை மறைந்தொழிந்து விடவில்லை என்பதே முக்கியமானது. சோஷலிசம் பல முகப்புகளைக் கொண்டது. சமூக ஜன நாயக இயக்கம் முழுவதும் இதில் அடங்கும். நெடுங்காலமாக சமூக ஜனநாயக இயக்கம் சோஷலிச இயக்கமாக கருதப்படாமல் ஒதுக்கப் பட்டது. இன்று அவை வேரூன்றியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிகரப் பாராட்டுக்கள்

எழுத்தாங்களை மாத்திரமே எடுகோளாகக் கொண்டு எழுத்தாளராக மதிப்பீடு செய்து கண்டி எம். ராமச்சந்திரனைக் கௌரவித்தமைக்குக் கௌரவ இந்து சமய, கலாச்சார, தமிழ்மொழி அமுலாக்கல் ராஜாங்க அமைச்சர் பீ.பீ. தேவராஜ் அவர்களைப் பாராட்ட மக்கள் கலை, இலக்கியப்பேரவை கடமைப்பட்டுள்ளது.

கௌரவிக்கப்பட்ட அத்தனை ஆறு எழுத்தாளர்களும் எப்பொழுதோ கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கலை, இலக்கிய காவலர்கள் தாங்கள் தானெனக் கூறிக்கொண்டு குடித்துக் கூத்தாடித் திரியும் கோமாளிகளினால் இவர்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டனர் என்ற நெருப்பிலிட்ட நிஜத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறது மக்கள் கலை, இலக்கியப்பேரவை.

எழுத்தாளரின் ஆக்கங்கள் நூலுருவில் வெளிவர வேண்டுமென விழையும் இப்பேரவை,இந்த நிதியுதவி ஐந்தாறுமடங்காக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், பேரவையின் இரு வேறு எஃகுப் பூக்கள், பாட்டாளிக்குப் பரிசு ஆகிய கவிதைத் தொகுதிகளையும், விடிவு சஞ்சிகையையும் மேலதிகத் தாமதமின்றி கொள்வனவு செய்யுமாறும் வேண்டுகோள் விடுக்கிறது.

எழுத்தாளர் கௌரவிப்பு, நூல் கொள்வனவு மற்றும் பிற கலாச்சார உதவிகள் யாவும் ஏற்றத்தாழ்வில்லாது எல்லோருக்கும் சமமாக்க நடவடிக்கை எடுக்க வெண்டும் என்பது ம. க. இ. பே.யின் உள்ளக்கிடக்கையாகும்

பல சிரமங்களுக்கு மத்தியில் வெளியிடப்படும் நூற் பிரதிகளைக் கொள்வனவு செய்து நாட்டின் நாலாப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கும், நூல் நிலையங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை விடுக்கிறது.

மத்திய குழு,
மக்கள் கலை, இலக்கியப் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தருக்கு பூ வைக்கும் புனித மண்ணில்...

★ நிதானிதாசன் ★
(பேராதனைப் பல்கலைக் கழகம்)

ஒரு
சூரியனை சுட்டுவிட்டதாக
எங்களில் சிலருக்கு
சுகமான குதூகலம் ஐயா!

-o-

ரிச்சர்ட்! நீ
மனித உரிமைக்காக
மரணித்த
சிவப்பு ரோஜா

-o-

எனது தீவின்
வடக்கே
பறங்கி ஆற்று நீர்த்தேக்கம்
முதல்-
தெற்கே-
ஊலன்தாவ நீர்த்தேக்கம்
வரை-
மனித உடல்களை
கங்கைகள் சுமக்கும்
காருண்ய பிரதேசத்தவர்கள்
ஐயா நாம்!

-o-

எனது தீவின்
நான்குபக்கக் கதவுகளும்
இழுத்து மூடப்பட்டு
இருட்டில் வாழும்
ஜனநாயக மூச்சுக்களில்லாத
பரிதாப மனிதர்கள்
ஐயா நாம்

-o-

நீதிக்காக வாதாடுபவர்களும்
சுரண்டலுக்கெதிராகக்
கலகம் செய்பவர்களும்
இரத்தத்துக்குள் இழுக்கப்பட்டு
இறக்கப்படும்போது
காருண்யம்பற்றியும்
அஹிம்சைபற்றியும்
புத்தருக்கு பூ வைக்கும்
புனித மண்ணில்
போதித்துக் கொண்டே
இருக்கலாம் ஐயா!

- o -

எனது இலங்கைத்தீவின்
எல்லாப் பிரதேசங்களும்
பீரேதத் தளமாகும் போதும்-
எனது மண்ணின்
மனிதர்களின் வாழ்வு
மயானத்துக்குள்ளாகும்போதும்
நாம்
நமது உரிமைகளை
எழுத்தில் மாத்திரமா
எடுத்துச் சொல்ல வேண்டும்
ஐயா?

- o -

இந்த
இருண்ட காலத்திலும்
சோகம் தைக்கப்பட்ட
நெருப்பு யதார்த்தத்திலும்
நாம்
அடிமை விலங்குடன்
மரணிக்கப் போவதில்லை
என்பதை உன்
காலடிச் சுவடுகள்
சொல்லிக் கொண்டே
இருக்கும் ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய கவிதைகள்

தயாரிப்பு : அபீதா

## ஜனநாயகம் வாழ்கிறது

ஒரு
நாட்காலை
சூர்யன் விடிந்தது

பாதையெங்கும்
மனிதர்களின்
பயந்த நடமாட்டம்!

இரண்டு இளைஞர்
ஒரு யுவதி
டயரோடு சேர்க்கப்பட்டு
மரணத்துக்குள் அடக்கம்

ஜனநாயகம்
வாழ்கிறது, வாழ்கிறது
கருகிய உயிரின்
சிதையின் மேல்
அது வாழ்கிறது

— வஷீரா ரபாய்தீன்
(பேராதனைப் பல்கலைக் கழகம்

## சதி

காக்கக் காக்க
தொலைந்தே போகிறது
தேசத்தில் அமைதி

— யதார்த்தன்
யாழ்ப்பாணம்

## சுதந்திரம்

தேசமே
நமது மனிதர்கள்
உன் மேனிக்கு சுமையா ?

மானிடப் பிணங்கள்
இரத்தத்துள் இருக்க
உனக்குமட்டும்
உயர் விருப்பமா?

நீ —
நீதிக்கான மனிதர்களை
உனக்குள்
புதைக்கப்படுவதனை
பகிஷ்கரித்ததன்
விளைவோ
வீதியோர சவங்கள் ?

நாம்
நல்லவர்களை இழந்து
எங்களின் தீயவர்களை
அழிப்பதுதானா
நமது தர்மமாகும்

இந்த நிகழ்வுகள்
எதற்காக?
தொலைத்த விடுதலையை !
தேடுதலுக்காகவே.
— புது நகரான் பொலன்நறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தோஷ விடியல்

வறுமைப் பிடியில்
வாழும் அப்பாவிகள் நாம்

எமது உழைப்பால்
ஏற்றம் கண்டு
சீற்றம்கொண்டுள்ளது
முதலாளி வர்க்கம்.

எமது ஏழைக் கரங்கள்
எழுச்சிக் கரங்களானால்
ஆர்த்தெழுவது
உழைப்பாளர் வர்க்கமே!

ஒரு நட்சத்திர எழுச்சி
நமக்குத் தருவது
சமத்துவ விடியலை!

— ஹம்சுல் இனாயா
பிலிமதலாவை

## இலக்கியம்

இது என்ன
மனித யதார்த்தம்
மறந்த இலக்கியம்?

அறியாமையின்
அநாகரீக வடிவங்களும்
புது
இலக்கியப் புத்தகத்தில்
நாகரிகமாகிறதே!

நமது
சோகம் சேர்ந்த
சேதிகள்
துன்பியலின் கொடுமைகள்
துடைக்கப்பட்டு வரும்
இலக்கியம்
இனி தேவையா?

— எம். மலிகான்
(பேராதனைப் பல்கலைக் கழகம்)

## "?"

இது என்ன?
தலை கவிழ்ந்து
கோணலாக!
ஓ —
என்
நேசமிக்க தேசத்தின்
எதிர்கால
அடையாளச் சின்னமோ?

— திக்குவல்லை ரதீமா

## வெற்றிக் கொடிகள்

சமூக எழுச்சிக்காய்
வீதி வழியே
தூக்கமின்றி
துப்பாக்கிகளுடன்
நாளைய விடிவுக்காய்
காத்துக் கிடக்கும்
சமூக நேசகர்களே
நாளைய
வெற்றிக் கொடிகள்.

— ஷாஹிர்சா தாஸீம்
தர்கா நகர்

## சமாதானம் வருமா

சமாதானமே
உனது வருகையின்மை
எதைக் காட்டுகிறது?

சாதி பேதமென
ஆயிரம் பிரிவுகள்
எமக்குள் எழுந்ததோ
உன் வருகையின்மைக்கு
காரணம்?

இந்த
இரத்த யதார்த்தம்
எதிர்காலத்திலும்
எழுந்துவருமா?

— நிம்லா - மாவனல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கணிதம் !

— கண்டி எம். ராமச்சந்திரன் —

"மத்த பாடத்திலே எல்லாம் 'பாஸ்' பண்ணீடுவேன் அப்பா 'மெத்சு' ஒன்னெய்த் தவிர" என்று ரவிச்சந்திரன் தன் தந்தையிடம் தனது க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை எழுதவிருக்கும் நிலையை விவரித்தான்.

"ஏலே! எட்டுப் பாடத்துலே ஆறு 'பாசானாப்' போதுமுன்னியே. அப்பறம் எதுக்குடாயா, ஒரு பாடத்துக்கு ஓசரம் ஓமுட்டு மூளெயெப் போட்டு ஒடைக்கிறே? ஏழு பாடத்துலே பாசு பண்ணீடு, அது போதும்" என்று ஆறுதல் கூறினார் அப்பா.

"அது சரிப்புடாதுப்பா! கணிதமுங்கிறதேக் கட்டாயபாடமாக்கி வைச்சிருக்காங்க! அதுலயும் 'பாசு' பண்ணாட்டி எதுவுஞ் செய்ய ஏலாது. வேலையுங் கெடைக்காது. அதுக்கு மேலைப் படிக்கவும் ஏலாது" என்றான் ரவிச்சந்திரன்.

கணிதம் கற்பிக்க அவனுடைய பாடசாலையில் ஆசிரியர் இல்லாமல் இல்லையாம். அவர் படிப்பிக்கும் முறையிலேதான் ஒன்றும் விளங்கிக் கொள்ள முடிவதில்லையாம். யாராவது ஒரு மாணவன் எழுந்து நின்று 'விளங்கவில்லை சார்' என்றால் போதுமாம், பயங்கரப் பிரம்படி தானாம். 'டியூஷன்' வகுப்புக்கு வந்து காசு கொடுத்து 'மெத்ஸ்' படிக்கும் வசதிபடைத்த மாணவ மாணவிகளும் 'விளங்கவில்லை சேர்' என்றாலும், 'விளங்கப்படுத்திக்கொண்டிருந்தால் 'சில பஸ்' முடிக்க இயலாது. 'சி. ஈ. ஓ.' வந்தானென்றால் நாயாய்க் குரைப்பான் என்பதோடு 'டியூஷன் கிலாசில்' விளக்குவதாகக் கூறி மேலே தொடருவாராம்.

'கணிதம் என்ற ஒரு பாடத்தைக் கட்டாயபாடமாக்கி ஏழை எளியவர்களின் பிள்ளை கட்கு முட்டுக்கட்டை வைத்துவிட்டு இலவசக் கல்வியின் தாய் தந்தையர் இவர், அவரென்றும் பெருமை பேசுவதெல்லாம் கேலிக்கூத்து' என விளங்கிக் கொள்ள வினா எழுப்புகிறான் ரவியின் தந்தை.

நம்ம கங்காணி, கணக்கப்புள்ளே, கண்டாக்கு, டீமேக்கரு, கிளாக்கு வூட்டுப் புள்ளெக எல்லாம் எப்படிய்யா பாசு பண்ணுதுக? ஒனக்கு மட்டுந்தான் அந்தக் கணக்கு வரமாட்டேங்குதோ? கூலிக்காரன்வூட்டுப் புள்ளெ தானேடா நீனு! அதுநாலே தான் படிப்பு வருது இல்லே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவுக எல்லாம் 'டியூஷன் கிலாஸ்'சுக்குப் போறாக அப்பா'' அப்ப நீயும் போ! ஒன்னே 'டியூஷன் கிளாசு'க்குப் போக வாணா முன்னு யாருடாய்யா கையெப் புடிச்சிக்கிட்டது.''

'' ஐயோ! அப்பா! ஒனக்கு ஒன்னும் வெளங்கித் தொலையுது இல்லையே! இஸ்க்கூலு வுட்டதுக்கு அப்புறம் ரெண்டரை மணியிலே இருந்து நாலரெ மணி வரைக்கும், கெலமையிலே மூனு நாளைக் கிப் படிக்கோணும் மாசம் முடியப் 'பீசு, முன்னூறு ரூபா யாரு குடுப்பா? நீ கொடுப்பியா? பென்சில், ரேசர், பேணா, கொப்பி வாங் கித் தரவே மூக்காலே அழுகிறே! ஒரே காலுச்சட்டையையும் கழு செயும் வருஷம் பூராவும் கழுவிக்கழுவிப் போடுகிறேன். முன்னூறு ரூபா குடுத்தமுன்னா, முழுக் குடும்பமும் மாசம் பூராவும் பட்டினி தான்?''

'' அப்ப நம்ம பெரிய பெரிய தலெவரு மாறாக எலவசக்கல்வி எலவசக்கல்வீன்னு பெருசாப் பேசுறது எல்லாம் எதுக்கூன்னு தாண்டா அய்யா, எனக்கு வெளங்கலே!''

தோட்டப்பாடசாலைக்கு வெளியே தொழிலாளர்களின் பிள்ளை கள் தலைகாட்டக் கூடாது என்பதற்காகத்தான் வசதியுள்ள வகுப் பறைகள், வாசிகசாலை, மனையியல் அறை, விஞ்ஞான ஆய்வுகூடம் எதுவுமில்லாத கணித, விஞ்ஞான, நடன, சங்கீத ஆசிரியர்கள் இல்லாத விளையாட்டு மைதானம், இயல் இசை நாடக அரங்கு இல்லாத – மாட்டுத் தொழுவமாகவே காட்சியளிக்கும் தோட்டப் பாடசாலைகளில் எதுவித மாற்றமுமின்றியே, தொடரவைத்திருக் கின்றார்கள். தப்பித் தவறி ஓரிருவரேனும் உயர்கல்வி பெறும் வாய்ப்பபையும் 'மெத்சை'க் கொண்டு மொத்தை வைக்கிறார்கள்.

தேசியமயம் என்ற போர்வையிலே தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்களைப் பொறுப்பேற்பதன் உள் நோக்கம் தோட்டத் துறையில் உத்தியோகம் பார்த்த தமிழர்களை அப்புறப்படுத்தி விட்டு ஆட்சியாளர்களின் அடிவருடிகளையும் கைக்கூலிகளையும் கொண்டு அவ்விடங்களை நிரப்பத்தான்.

நமது தலைவர்களும் விவரந்தெரியாதவர்கள் அல்ல. உயர் கல்வி பெறும் வாய்ப்பை கணிதம் ஒன்றையே கட்டாயபாடமாக்கித் தடுத்துவிட்டு, தொழிலாளர் விவாயிகளின் பிள்ளைகள் டாக்டர்ஸ், என்ஜினியஸ், எக்கவுண்டன்ட்ஸ் ஆகவேண்டுமென்றே மேடைகளில் மாத்திரம் முழங்கி ஊரை எய்க்கிறார்கள், அவர்களது பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்கவைத்துக் கொண்டு.

'' சந்தாப் பணத்தெ மாத்திரம் மறக்காமே, செக்குரோலுலே புடிச்சி, செக்கே...... ஜில்லாவுக்கு, மாசாமாசம் அனுப்பீறிங்கடோய்......?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்மதக் கவியெழுதும்

# மரணத் தேவதை

— பாட்டொலிச்சாத்தன் —

அங்கம் – 1

எம தரும ராஜனின்
அரண்மனை - அன்று
அரவம் தீண்டி
ஆள் இறந்த
இல்லத்தைப் போல்
சோபை இழந்திருந்தது
ஏது நடக்குமென்ற
பயத்தில் சித்திரக்குப்தன்
நடு நடுங்கிக்
கொண்டிருந்தான்

கடு கடுத்த முகத்துடன்
கடிந்து வந்தமர்ந்த
எமன் சித்திரகுப்தனை
நோக்கி வினவினான்

சித்ர குப்தா
மரண ஏட்டின்
நிலுவைதனை
கணக்கிட்டுச் சொல்

ஆம் ஐயனே!
எல்லா நாட்டிலும்
ஆண் பெண் மரணங்கள்
சமமாகவே இருக்கின்றன
இலங்காபுரியில் தான்
இளைஞர் வரவு அதிகமாயும்
யுவதிகள் வரவு
சொற்பமாயும் உள்ளது
அரசே.

சித்திரக் குப்தா
படு பாவி பிரம்மன்
உன் மண்டைக்குள்
களிமண்ணையல்லவா
வைத்து படைத்துவிட்டான்

வீட்டையும் வளவையும்
சீதனமாய்க் கேட்கும் - அந்த
தீவதனில் - நங்கையர்
நாண்டுச் சாவதற்கு
நாலுமுழக் கயிறுகளை
ஆக்கச் சொன்னேனே.

ஆனதெல்லாம் பார்த்ததாகி
விட்டது

அரசே! ஆனால்
தென்னிந்தியாவில் பலித்த
நம் பாச்சா
இங்கு பலிப்பதாய் இல்லை!
படித்த பெட்டையர்
பல நாடுகளுக்கும்
பறந்து விடுகிறார்கள்
அங்கு அரசே!
இதனிடையே அங்கோர்
கிழவன் பெண் விடுதலையை
புத்தகமாய் எழுதி வெளியிட
இப்போது கணவன்
இல்லாமலே கருக் கொள்ள
முயற்சி நடக்குதாம்
ஐயையோ அபச்சாரம்!
அபச்சாரம்!

சித்திரா! கன்னியரை மயக்கி
கயமை தனைச் செய்யும்
மரண தேவதையொன்றை
ஏற்பாடு செய்.
மன்மதனுக்கும்
ஒத்துழைப்பதற்கு
உடன் செய்தியனுப்பு!
அந்த மரண தேவதைக்கு
சரசுவதி கடாட்சம்
கிடைக்கவும் - கலைமகளுக்கு
ஓர் ஓலை அனுப்பு!
மரண தேவதையில்
கன்னியரை மயங்கச்
செய்து – மரணப்பாதைக்கு
இழுத்து வருவோம்.

அங்கம் – 2

அரசே கலைமகளுக்கு ஓலை
தனை அனுப்பிவிட்டேன்
அவள் மரணத்துக்கு
ஒத்துழைக்க மறுத்துவிட்டாள்
அப்படியாயின்
இலக்குமியின் தயவைப்
பெற்று மரணத் தேவதையை
பணக்காரனாய் அனுப்புக
சித்திரா.

[அடுத்த இதழில் முடிவடையும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியலில் இடதுசாரிகளின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

— வி. எல். பெரைரா —

இலங்கை இடதுசாரி கட்சிகள் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக இல்லாததினால், தொழிலாளர் வர்க்கம், சமுதாயத்திற்காக மட்டுமல்ல ஒரு ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமைப்பதற்கான விழிப்புணர்ச்சியை உருவாக்கக்கூடிய பிரசாரத்தை நடத்தக் கூட சக்தியற்றவர்களாக இருக்கின்றனர். இலங்கையில் மட்டுமல்ல உலக ரீதியாக இக் காட்சிகளைக் காணலாம்.

சோஷலிச நிர்மாணத்தைக் கட்டி எழுப்ப உருவாக்கப்பட்ட சோஷலிச நாடுகளும் அவர்களை நம்பி உள்ள கட்சிகளுக்கு பலமான ஆதரவும் பிரசார ரீதியிலான சாதனங்களையும் எதிர்பார்த்த அளவிற்கு கொடுத்து உதவவில்லை என்றும் சொல்லலாம்.

இன்று கிழக்கு ஐரோப்பாவில் நடக்கின்ற மாற்றங்கள், அந் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியும் உள் ஜனநாயக வளர்ச்சியும் இல்லாதிருப்பதினால், இப்படி ஒரு மாற்றம் தவிர்க்க முடியாத தொன்றாகும். இதனால் சோஷலிசம் தோற்று முதலாளித்துவம் வெற்றி பெற்று வருவதாக கூறும் கூற்றுக்கள் விஞ்ஞான ரீதிக்கும் இயங்கியல் வாதத்திற்கும் பொருத்த மற்றதாகும்.

கிழக்கு ஐரோப்பா சோஷலிச நாடுகள் சில தவறான திட்டங்களினால் இப்படியான வீழ்ச்சிக்கு தள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பாட்டாளியின் சர்வாதிகாரத்திற்கான சர்ச்சைகளும் உள் ஜனநாயகம் (மாற்று கருத்தைச் சொல்லும் உரிமை, மாற்று திட்டத்தை சமர்ப்பிக்கும் உரிமை) கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்தப் பின்னணியில் இலங்கையில் இடதுசாரி அமைப்புகளைப் பார்ப்போம். இலங்கையின் முதன் முதலாக தொழிலாளர் கட்சி 1935-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதுவே லங்கா சமசமாஜக் கட்சி. இக் கட்சி உருவாகின்ற காலக் கட்டத்தில் சோவியத் ரஷ்யாயில் உள் கட்சிப் போராட்டம் உச்சக் கட்டத்தில் இருந்தது. இதில் ட்ரொட்சிக்கு எதிராக புனையப்பட்ட வழக்கும், "சோஷலிசம் ஒரு நாட்டில்" என்ற தத்துவத்திற்கு ஆதரவாக ரஷ்யாவின் அதிகார சாதியும், சர்வதேச புரட்சியை ஆதரிக்கின்ற ட்ரொட்சி வாதிக்கும் இடையில் சர்ச்சைகள் இருந்தன. லங்கா சமசமாஜிக் கட்சியை உருவாக்கியவர்கள் ட்ரொட்சிக்கின் சித்தாந்தத்தை ஆதரிப்பவர்களாக இருந்தார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, இலங்கையின் சுதந்திரத்திற்காக சமசமாஜிக் கட்சி போராடியது. இதனால் பிரித்தானிய அரசால் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள் சிலர் தப்பி இந்தியாவுக்கு சென்று தலைமறைவாக வேலை செய்தார்கள். அங்கேயும் சோஷலிச இயக்கத்தை உருவாக்க உதவி செய்தார்கள். உலக யுத்தத்தின் பின் சமசமாஜிக் கட்சியின்பால் மக்கள் செல்வாக்கு ஓங்க ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியிலுள்ள ஸ்டாலின்வாத சிறு குழு நீக்கப்பட்டது. ஸ்டாலின் வாதத்தை பின் பற்றுகின்ற திரு. பீட்டர் கெனமன் தலைமையில் 1943 - ஆம் ஆண்டு இலங்கை பொதுவுடமைக் கட்சியை உருவாக்கினார்கள். லங்கா சமசமாஜிக் கட்சி நான்காவது அகிலத்தில் சேர்க்கப்பட்டது. லங்கா சமசமாஜிச் கட்சி சிறுபான்மை, குறிப்பாக தமிழ் பேசுகின்ற மக்களின் உரிமைகளை வென்றெடுக்க குரல் கொடுத்தது. இந்த விடயத்தில் பொதுவுடமைக் கட்சியும் பின் வாங்கவில்லை.

பிரித்தானிய ஆதிக்கம் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் தங்கள் ஆதிக்க நன்மைக்காக இணைத்தது. ஆனால் அவர்கள் ஒன்றாக என்றும் இணைந்து வாழக் கூடிய நிலையை உருவாக்கவில்லை.

1956 - ஆம் ஆண்டு மறைந்த எஸ். டபிள்யு. ஆர், டி. பண்டாரநாயக்காவின் கட்சி ஆட்சிக்கு வந்தபோது இடதுசாரி கட்சிகளிடையே உறுதியான கொள்கை தடம் புரள ஆரம்பித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும்பாலான கிராமத்து விவசாயிகளுடைய ஆதரவும் கிராமங்களிலுள்ள தனவந்தர்களின் ஆதரவும் ஏற்பட்டது. வெளிநாட்டில் படித்துவந்த அமைப்பு ரீதியாகவுள்ள புத்தி சீவிகளுக்கு எதிராக புதிய சிங்கள புத்திசீவிகள் எழ ஆரம்பித்தனர்.

இதன் காரணமாக லங்கா சமசமாஜிக் கட்சிக்கும் பொதுவுடமைக் கட்சிக்கும் கிராமப் புறங்களில் கிடைத்த ஆதரவு குறைய ஆரம்பித்தது. இந் நிலையில் லங்கா சமசமாஜிக் கட்சி சிறிலங்கா கட்சியை சரியாக எடைபோட்டு, அதனை இந் நாட்டில் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கும் முதலாளித்துவ கட்சி என சரியான சித்தாந்தாந்த அடிப்படையில் வர்ணித்தது. ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1956 - ஆம் ஆண்டில் வெற்றி அடைந்தவுடன் லங்கா சமசமாஜிக் கட்சியின் உறுதிப் பாட்டில் கீறல் விழத் தொடங்கியது.

ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில், லங்கா சமசமாஜிக் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த தோழர் லெஸ்லி குணவாதனா, விட்ட அறிக்கையில், ''லங்கா சமசமாஜிக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு சுதந்திரமான கட்சி என்ற நிலையில் நாட்டினை முற்போக்கு வழியில் முன் நடத்திச் செல்லும் போது ஆதரவு அளிக்கும். லங்கா சமசமாஜிக் கட்சி எந்த சதிகார வேலையினையும் பெரும் முதலாளித்துவ வாதிகளையும் வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு இணைந்து உதவி அளிக்கும். முதலாளித்துவத்திற்கு எதிராக எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் உதவி அளிக்கும்.

சோஷலிச சமுதாயத்திற்கு எதிரான போராட்டத்திற்கு மக்களை ஏவுகின்ற போது அதனை தடுக்க எல்லா முயற்சியும் எடுக்கும் என்று கூறினார். (நன்றி: 4-8-1956 டெயிலி நியூஸ்) மேற் கூறப்பட்டதிற்கு ஏறப லங்கா சமசமாஜிக் கட்சியீன் நாடாளுமன்ற குழு எதிர்க் கட்சியோடு சேராது சுயேச்சையாக நாடாளுமன்றத்தில் செயல்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் சில முற்போக்கு நடவடிக்கைகளில் இறங்கியது என்பதனை மறந்து விட முடியாது. துறைமுகத்தை அரசுடமையாக்கியது, வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களை அரசுடமையாக்கியது.

இதைவிட மிக முக்கியமானதொன்று, பல்கலைக்கழகம் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச வசதி செய்யப்பட்டது. இதனால், கிராமத்திலுள்ள இளைஞர்கள் பட்டதாரிகளாக கிராம சூழலை சிந்தித்து செயல்படக் கூடிய ஒரு சகாப்தத்தை உருவாக்கியது. இவை அனைத்தையும் நாட்டின் நன்மைக்காக என்று கூறினாலும் இவை சோசலிஷ அமைப்பின் இலக்கை நோக்கிச் செல்லவில்லை. இதனால் நாட்டில் வெளிநாட்டு ஏகாதிபத்திய முதலாளித்துவ வாதிகளுக்கு பதிலாக இலங்கையில் புதிய முதலாளித்துவ வாதிகளையும் குட்டி முதலாளித்துவ வாதிகளையும் உருவாக்கப் பயன்பட்டது. அன்று இருந்த குட்டி முதலாளித்துவவாதிகள் இன்று பெரும் முதலாளித்துவவாதிகளாக இருக்கின்றனர். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடைவெளி சுருங்கவில்லை.

## 1953 ஆம் ஆண்டு ஹர்த்தால்

1952 ஆம் ஆண்டு மே மாதம் நடத்திய தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 54 உறுப்பினர்களையும், என். எம். தலைமையிலான லங்கா சமசமாஜிக் கட்சி 9 உறுப்பினர்களையும், பொதுவுடமைக் கட்சி இரண்டு உறுப்பினர்களையும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தது. 1952 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டு வரை இருந்த நிதியமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன 1953 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின் போது 25 சதமாக இருந்த ஒரு கொத்து அரிசியை 70 சதமாக அதிகரித்தார்.

சீனியின் விலையையும் உயத்தினார். பள்ளி மாணவர்களுக்கு கொடுத்து வந்த மதிய உணவை இல்லாது செய்தார். இரயில் பயணச் சீட்டை இரண்டு மடங்காக்கினார். அதே நேரத்தில 1952 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நமது வெளிநாட்டு இருப்புத் தொகை 120.8 கோடியாக இருந்தது. ஆனால் ஜூலை மாதத்தில் 68.5 கோடிக்கு வீழ்ந்தது.

அரிசியின் விலை மக்களை பாரதூரமாக பாதிக்கச் செய்தது. இதனால் 1953 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி ஒரு பெரும் ஹர்த்தாலை எதிர்க்கட்சியினர் நடத்தினர். இதுதான இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் நடத்திய முதல் பெரும் ஹர்த்தால் ஆகும். தீவிரவாத தொழிலாளர்கள் வன்முறையிலும் ஈடுபட்டனர். இந்நேரத்தில் பிரதமராக இருந்த திரு. டட்லி சேனநாயக்க கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் போடப்பட்ட கப்பலில் தஞ்சம் புகுந்ததாக கூறப்பட்டது. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவத்தை வரவழைத்து அதிகார வர்க்கத்தை பாதுகாக்க வழி செய்தது. பலர் இதில் இறந்தார்கள். இதன் பின் திரு. டட்லிசேனநாயக்க இராஜினாமா செய்து திரு. ஜோன் கொத்தலாவலை பிரதமராக வந்து அரிசியை பழைய விலைக்கு கொண்டுவந்தார்.

1953 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் படிப்படியாக வர்க்க அரசியல் தீவிரமாக தொழிலாளர்கள் மத்தியில் பரவத் தொடங்கியது. தொழிலாளர் வர்க்கம் இலங்கையில் ஒரு சமதர்ம ஆட்சியை உருவாக்கத் தயாராகவே இருந்தது.

இலங்கையில் சமமற்ற பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அன்று இடதுசாரி தலைமை சரியாக தொழிலாளர்களை வழி நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால், 1953 ஆம் ஆண்டு இலங்கையிலும் சோஷலிச புரட்சி ஒன்றினை நடத்தி இருக்கலாம். இதனைப் பற்றி தோழர் என். சண்முகதாசன் ஒரு கட்டுரையில் இடதுசாரி தலைமைகள் சரியாக இருந்தால் அரசைகைப்பற்றியிருக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த இடத்திலும் இடதுசாரிதலைமைகள் தொழிலாளர் வர்க்கத்தைக் காட்டிக்கொடுத்தது என சொல்லலாம்.

## இரு மொழிக் கொள்கை

1944 ஆம் ஆண்டு மேமாதம் திரு. ஜே. ஆர். ஜயவர்தனா சட்ட சபைக்கு தோந்தெடுக்கட்டார். அப்போது அவர் சிங்கள மொழியை அரச கரும மொழியாக்க வேண்டும் என்ற பிரேரணையை கொண்டு வந்தார். அவ்வேளையில் திரு. வி. நல்லையா அரச கரும மொழியாக சிங்களமும் தமிழும் இருக்க வேண்டும் என மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனை திரு. ஜே. ஆர். ஜயவர்தனா ஏற்றுக் கொண்டார்

சட்ட சபையில் இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, திரு டி. எஸ். சேனநாயக்கா பேசும்போது, "இன்றைய முக்கிய தேவை ஒரு நாட்டை கட்டி எழுப்புவதாகும். ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு மொழியால் அல்ல இரு மொழியால் தான் முடியுமென்றார். இதற்கு திரு. பண்டாரநாயக்காவும் இணங்குவதாகக் கூறினார். திருத்தப்பட்ட மசோதாவை வாக்களிப்பிற்கு போட்டபோது சார்பாக 27 உம் எதிராக 2 உம் கிடைத்தது.

சுதந்திரம் கிடைத்தபின் இரு மொழிகளும் பாவனை மொழியாகத் தான் இருந்தன. ஆனால் 1953, 54 ஆம் ஆண்டுகளில் சிங்கள பௌத்தம் பேசிய சிலர் சிங்களத்தையும் பௌத்த மதத்தை முறையே அரச மொழியாகவும் அரச மதமாக்கவும் முனைந்தார்கள். இதன் காரணமாக ஒய்வு பெற்ற பிரதம நீதியரசரான சேர். ஆர். விஜேவர்தனா தலைமையில் ஒரு கொமிசனை நியமித்தார்கள்.

திரு. எல். எச். மெத்தானந்தா போன்றவர்கள் பல்கலைக்கழகத்தில் நுழைவோர் தொகையினை சேகரித்தார்கள். இதில் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்வது அதிகமாக இருப்பதை அறிந்தார்கள். இதன் மூலம் மொழி செயல்பாட்டுக்கு எதிர்ப்பு வர ஆரம்பித்தது.

## அரசியல் பதவிக்காக

இந்த அடிப்படையின் ஆரம்பத்தில் சகல இன ஒற்றுமைக்காக பேசியவர்கள் மாறினார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிங்களம் மட்டும் என்ற கொள்கையை ஏற்றது. இதனைத் தொடர்ந்து ஐக்கியத் தேசியக் கட்சியும் தனி சிங்களக் கொள்கையை ஏற்றது.

1956 ஆம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணி என்றொரு தேர்தல் முன்னணி அமைக்கப்பட்டது. இந்த முன்னணியில் பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பிலிப் குணவர்தனாவின் புரட்சிகர லங்கா சமசமாஜிக் கட்சி, திரு. டபிள்யூ. தசநாயக்காவின் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சிங்கள மொழி முன்னணி போன்ற கட்சிகளும் இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தருணத்தில் மார்க்ஸிய கொள்கை அடிப்படையில் லங்கா சமசமாஜிக் கட்சியும் பொதுவுடமைக் கட்சியும் சரியான கொள்கையில் சிங்களமும் தமிழும் அரச மொழியாக வேண்டுமென்ற பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

1956 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி 39.5 சதவிகித வாக்குகள் பெற்று 91 ஆசனங்களில் 51 ஆசனங்களை வென்றது. ஐக்கிய தேசியக் கட்சி 27 சதவிகித வாக்குகளைப் பெற்று எட்டு ஆசனங்களையும், லங்கா சமசமாஜிக் கட்சி 10.5 சதவிகித வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களையும் பொதுவுடமைக் கட்சி 4.6 சதவிகித வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களையும் பெற்றன.

இதில் ஓர் ஆசனம் வடக்கு மாகாணத்தை சேர்ந்தது. என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் மக்களின் நலனை முன்வைத்து உருவாக்கிய தமிழரசுக் கட்சி 5.4 சதவிகித வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களைப் பெற்றது. தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் முறையாக பொதுவுடமைக் கட்சியின் சார்பாக வடக்கு மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு. பீ. கந்தையா ஆவார். அது பருத்தித்துறையாகும் (Point Pedro)

திரு பண்டாரநாயகா பிரதமரானார். எதிர்க்கட்சி தலைவராக டாக்டர் என். எம். பெரேரா நியமிக்கப்பட்டார்.

இங்கேயிருந்து இரண்டு இடதுசாரிகளுடைய போக்கும் மார்க்ஸிய கொள்கையிலிருந்து மெல்ல நழுவ ஆரம்பித்தது. ஒரு குட்டி முதலாளித்துவக் கட்சி. காலக்கட்டத்தில் ஒரு முதலாளித்துவக் கட்சியாக பரிணாமம் பெறத்தான் நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. குட்டி முதலாளித்துவ கட்சி என்று அறிமுகமான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலும் திரு. பிலிப் குணவர்தனா விவசாய மந்திரியாக பணியாற்றினார். திரு பிலிப் குணவர்தனா தீவிர விவசாய சீர்திருத்தத்தைக் கொண்டுவர தயாராக இருக்கும்போது சிறீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள பிற்போக்கு வாத 10 மந்திரிகள் விலக்கப்பட்டனர். இது இடதுசாரி கட்சிகளுக்கு ஒரு படிப்பினையாக இருந்திருக்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி தனிச் சிங்களம் என்ற மசோதா கொண்டு வரப்பட்ட போது கலாநிதி என். எம். பெரேரா "1936 ஆம் ஆண்டு கட்சி ஆரம்பித்த போதே லங்கா சமசமாஜிக் கட்சி இரு மொழியையும் ஆதரித்ததோடு, நாடு சிங்களத்திலும் தமிழிலும் நிர்வாகம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் முதல் வேலைத் திட்டம் என்றார்".

திரு. பீட்டர் கெனமன் பேசும்போது நான் ஒரு பொதுவுடமைவாதி என்பதில் பெருமை அடைகின்றேன். ஆதலால் இந்த தனி சிங்கள மசோதாவை எதிர்க்கின்றேன் என்றார்.

எதிர்ப்புக்கள் மத்தியில் தனிச் சிங்கள மசோதா நிறைவேற்றப் பட்டது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIDIVU

130, D. S. SENANAKE VEEDIYA,
KANDY.



பிரதம ஆசிரியர்:-

நிதானிதாசன்

(ஆர். எம். இம்தியாஸ்)

ஆசிரியர் குழு:-

கண்டி எம். ராமச்சந்ரன்

வஸீரா ரபாய்தீன்

எஸ். பி. செல்வராஜ்

எம். இஸட். ஷாஜஹான்

எம். எஸ். எம். சியாத்

முகவரி:

130, டி. எஸ். எஸ். வீதி,

கண்டி.

தொலைபேசி:- 08-23494

சந்தா விபரம்:-

ஆறுமாதச் சந்தா— ரூ. 30-00

ஒருவருடச் சந்தா— ரூ. 60-00

(தபால் செலவு உட்பட)

சந்தா அனுப்ப விரும்புவோரும். தனிப் பிரதிகளைக் கொள்வனவு செய்ய விரும்புவோரும், பெறுபவராக R. M. IMTIYAZ எனவும், தபாலகமாக Kandy எனவும் இடவும்.


## ம. க. இ. பே. கிளைச் செய்திகள்!

ம. க. இ. பே. கொழும்புக் கிளையின் 15 ஆம் கவி மாலைப் பொழுது நிகழ்ச்சியும் கருத்தரங்கும் ஆர். ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள்: வி. எல். பெரைரா. வி. எஸ். மணியம், செ. கணேசலிங்கன் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

ம. க. இ. பே. கண்டிக் கிளை அகாலில் பாட்டாளிக்குப் பரிசு நூல் வெளியீட்டு விழா கண்டி. பிராச்டேல் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அ. இராமன், செ கணேசலிங்கன் ஆகியோர் கொடாக்கவுரை நிகழ்த்தினர் விழாவில் குட்டி கலைவிழாவும் நடைபெற்றது.

ம. க. இ. பே. விளைவில் தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபடவுள்ளதாக நிறைவேற்றுக் குழு உறுப்பினர் எம். பால கிருஷ்ணன் தெரிவிக்குள்ளார்.

ம. க. இ. பே. மத்திய குழு, க/கலைமகள்வித்தியாலயத்துக்கு ஆயிரம் ரூபாபெறுமதியான நூல்களை அன்பளிப்புச்செய்தது.

ம. க. இ பே. கொட்டகலைக் கிளை அங்குரார்ப்பணமாகியுள்ளது. தலைவர்: வி. சுந்தாலிங்கம். செயலாளர்: டி. யோகேஸ்வரி, பொருளாளர். எப். கிறிஸ்தோபர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# VIKNA BEST INSTITUTE

Vikna is very popular in the A/L results, University entrance

G C.E. A/L and G.C.E. O/L.

Panel of Teachers for G.C.E. A/L

| | |
|---|---|
| CHEMISTRY | : K. A. Srikrishna Raj B.Sc, M.Sc. |
| BOTANY | : M. Velaiyutham B Sc. Dip in Edu. |
| ZOOLOGY | : K. Ariyalingam B.Sc, Dip in Edu. |
| PHYSICS | : S. Ganeswaran B.Sc, |
| PUREMATHS<br>APPLIEDMATHS | S. Pusparaj |
| ACCOUNTANCY | : I. P. Sathyrupan |
| ECONOMICS<br>LOGIC | S. JEEVAN B A. Dip-in-Phy. |
| COMMERCE | : S. Sri Chandran B. Com., |
| GEOGRAPY | : Ram Kaleel |

மலையகத்தின் கலையகமாம் கண்டிநகரில் கல்வியின் தலைமைத் தளமாக மிளிரும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்

## விக்னா கல்வி நிலையம்

219/5, TRINCOMALEE STREET,
KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org